Registered as a Newspaper in Sri Lanka விலை ரூபா ஒன்று

# ஈழமுரசு

முரசு 2 22-6-1985 சனிக்கிழமை (ஆனி 8 ஷவ்வால் 3) முழக்கம் 137

## இரவு எட்டு மணிக்கு இன்று முதல் ஊரடங்கு!

யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, மன்னார் மாவட்டங்களில் நடைமுறையிலுள்ள ஊரடங்குச் சட்டம் இன்று முதல் இரவு எட்டு மணிக்கு அமுலுக்கு வரும் என்று அமைச்சர் அத்துலத் முதலி நேற்று அறிவித்தார். ஆனால் காலை நாலு மணிவரை ஊரடங்குச் சட்டம் அமுலில் இருக்கும். அடுத்த வாரம் முதல் இதனை மேலும் தளர்த்தவும் பாதுகாப்பு அமைச்சு ஆலோசித்து வருகின்றது. நேற்று வரை இரவு 7 மணிக்கு ஊரடங்குச் சட்டம் ஆரம்பமானது.

# தீவிரவாதிகள் வன்செயலில் ஈடுபடாவிடின் படையினரும் ஈடுபடார் என லலித் அறிவிப்பு'

ஜனாதிபதி ஜெயவர்த்தனவின் தலைமைத்துவத்தின் கீழேயே இலங்கையின் இனப் பிரச்சினை தீர்வுக்கு புதிய வழி பிறந்துள்ளது என தேசிய பந்தோபஸ்து அமைச்சர் லலித் அத்துலத் முதலி நேற்று பாராளுமன்றத்தில் அவசரகாலச் சட்ட நீடிப்பு விவாதத்தில் பேசுகையில் கூறினார்.

அமைச்சர் தொடர்ந்து பேசுகையில் இந்த நிலை ஏற்பட இந்திய அரசு வழங்கிய ஒத்துழைப்புக்கு பாராட்டு தெரிவித்தார். மக்கள் கொலை செய்யப்படுவது நிறுத்தப்பட்டுவிட்டது என்று கூறிய அமைச்சர் ஒரு நிபந்தனை, சமாதானத்தை அடைய தெரிவிக்கப்படும் எந்தப் பிரேரணையும் பொதுமக்களின் அபிப்பிராயத்துக்கு விடப்படும். இதுசம்பந்தமாக மக்கள் பொறுமை, அமைதி, காருண்யம், விவேகம் ஆகியவற்றைக் கடைப்பிடிக்க வேண்டும் என்றார்.

நாட்டின் பாதுகாப்பு பற்றிக் குறிப்பிட்ட அவர், மற்றைய தரப்பினர் வன்செயலில் ஈடுபடாவிட்டால் பாதுகாப்பு படையினரும் எதிலும் ஈடுபடமாட்டார்கள் என உறுதியளித்தார், அத்துடன் ஆயுதப்படையினர் வடபகுதியில் இருந்து

-4-ஆம் பக்கம் பார்க்க

# கூட்டணியினர் எதிர்க்கட்சிகள் பேச்சு திங்களன்று ஆரம்பம்

## முதலாவது சந்திப்பு சுதந்திரக் கட்சியுடன்; ஆலாலு, தர்மர் நாளை கொழும்பு செல்வர்

(கொழும்பு)

தமிழர் விடுதலைக் கூட்டணிப் பிரமுகர்களுக்கும், இலங்கையின் எதிர்க்கட்சித் தலைவர்களுக்குமிடையிலான, பல சுற்றுப் பேச்சுவார்த்தைகள் நாளை மறுதினம் திங்கட்கிழமை கொழும்பில் ஆரம்பமாகுமென முன்னாள் மன்னார் எம். பி. திரு. சூசைதாசன் நேற்றிரவு ஈழமுரசுக்குத் தெரிவித்தார்.

இப்பேச்சுவார்த்தைகள் இன்று சனிக்கிழமை ஆரம்பமாகுமென முன்னர் அறிவிக்கப்பட்ட போதிலும், யாழ்ப்பாணத்திலிருந்து முக்கியஸ்தர்கள் செல்வதில் தாமதம் ஏற்பட்டதால் பின் போடப்பட்டதாகவும் அவர் தெரிவித்தார்.

கூட்டணியின் நிர்வாகச் செயலாளரும், முன்னாள் கோப்பாய் எம்.பியுமான திரு. மு. ஆலாலசுந்தரம், முன்னாள் மானிப்பாய் எம். பீ. திரு. வி. தர்மலிங்கம் ஆகியோரே பேச்சுவார்த்தைகளில் பங்கேற்பதற்காக நாளை கொழும்பு செல்வார்கள் எனத் தெரியவந்துள்ளது.

கலாநிதி நீலன் திருச்செல்வம் ''கூட்டணி-எதிர்க்கட்சிகளின் பேச்சுவார்த்தையில்'' முக்கியமான இடத்தை வகிக்கலாமெனக் கூட்டணி வட்டா

—4 ஆம் பக்கம் பார்க்க

## ஸ்ரீமாவோ டில்லி செல்வார்?

இலங்கை இனப் பிரச்சினை பற்றி பாரதப் பிரதமர் திரு. ராஜீவ் காந்தியுடன் பேச்சு

—4 ஆம் பக்கம் பார்க்க

## முகாம் பகுதிக் கடலுக்கு மீன்பிடிக்கச் செல்லாதீர்

வடபகுதிக் கடலில் மீன் பிடிக்கச் செல்பவர்கள் பருத்தித்துறை, வல்வெட்டித்துறை ராணுவ முகாம்கள், காரைநகர் கடற்படை முகாம்களுக்கு முன்னுள்ள கடல் பகுதிகளைத் தவிர்த்துக் கொள்ளுமாறு கேட்கப்படுகின்றனர்.

மற்றைய பகுதிகளில், ஊரடங்குச் சட்டம் அமுலில் இல்லாத வேளையில், கரையிலிருந்து மூன்று மைல் தூரம் மீன்பிடிக்கச் செல்லலாம் என அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கம் தெரிவித்தார்.

நெடுந்தீவு, அனலைதீவு பகுதிகளிலும் இவ்வாறு மீன்பிடிக்க அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

—4 ஆம் பக்கம் பார்க்க

## சாவகச்சேரி நகர சபையில் பெரும் கொள்ளை

சாவகச்சேரி நகரசபையில் நேற்று முன்தினமிரவு நடைபெற்ற கொள்ளைச் சம்பவத்தில் அங்கிருந்த சகல பொருட்களும் அபகரித்துச் செல்லப்பட்டதாக தெரியவந்துள்ளது.

## அமிர் வேண்டுகோள்:

## தமிழரைக் கொலை செய்வதை இனியாவது நிறுத்தவேண்டும்!

(சென்னை)

''பயங்கரவாதிகளைத் தேடுகிறோம் என்று கூறிக்கொண்டு அப்பாவித் தமிழர்களைக்கொலை செய்வதை இலங்கை அரசாங்கம் நிறுத்த வேண்டும்'' என்று தமிழர் விடுதலைக் கூட்டணிச் செயலதிபர் திரு. ஏ. அமிர்தலிங்கம் நேற்று சென்னையில் வெளியிட்ட அறிக்கை ஒன்றில் கோரியுள்ளார்.

—4 ஆம் பக்கம் பார்க்க

## யாழ்தேவி இன்று கொழும்பிலிருந்து வரும்; நாளைமுதல் இரு வழிச்சேவை நடைபெறும்

கொழும்பிற்கும் காங்கேசன்துறைக்குமிடையிலான ரயில் சேவை இன்று முதல் ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இன்று காலை 7-05 மணிக்கு கொழும்பிலிருந்து புறப்படும் யாழ்தேவி பிற்பகல் 2-40க்கு யாழ்ப்பாணத்தையும் 3-10க்கு காங்கேசன்துறையையும் வந்தடையும். பின்னர் நாளை காலை 6-25க்கு காங்கேசன்துறையிலிருந்து புறப்பட்டு 6-40க்கு யாழ்ப்பாணத்தில் தரித்து 2-00 மணியளவில் கொழும்பு சென்றடையும்.

நாளை ஞாயிற்றுக்கிழமையிலிருந்து மேற்குறிப்பிட்ட நேரத்தில் இருபகுதியிலிருந்

—4-ஆம் பக்கம் பார்க்க

## மெயில் ரயில், இன்டர்சிற்றி சேவைகளும் ஆரம்பம

கொழும்புக்கும் யாழ்ப்பாணத்துக்கும் இடையிலான மெயில் ரயில் சேவை திங்கட்கிழமையும், 'இன்டர் சிற்றி' ரயில் சேவை 26ம் திகதி புதன் கிழமையும் ஆரம்பமாகுமென புகையிரத இலாகா நேற்றிரவு

—4-ம் பக்கம் பார்க்க

## பாராளுமன்றத்திலிருந்து

# அனுரா குழுவினரும், தினேஷும் நேற்று வெளிநடப்புச் செய்தனர்

அவசரகாலச் சட்டத்தை மேலும் ஒரு மாதத்துக்கு நீடிப்பதற்கான விவாதம் நேற்று பாராளுமன்றத்தில் ஆரம்பமானபோது எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுரா பண்டாரநாயக்கா கூடிய நேரம் இதற்கு ஒதுக்க வேண்டுமென விடுத்த வேண்டுகோள் நிராகரிக்கப்பட்டதால் அவரும், மற்றும் சுதந்திரக் கட்சி உறுப்பினர்களும் சபையை விட்டு வெளிநடப்புச் செய்தனர்.

அதற்கு முன்னர் பலத்த கூச்சலுக்கு மத்தியில் 'துரோகி! சிங்கள இனத்தை விற்பவர்கள்'' என்ற பல்வேறு சொற்பிரயோகங்கள் சரமாரியாகப் பலராலும் சபையில் பாவிக்கப்பட்டன.

இதனையடுத்தே அனுரா பண்டாரநாயக்காவும், அவரது கட்சியினரும் வெளியேறினர்.

—4 ஆம் பக்கம் பார்க்க

## பக்தர்களுக்கு சோதனையில்லை

நயினாதீவு ஆலயத்திற்கு திருவிழாவுக்காகச் செல்லும் பக்தர்கள் எவ்வித சோதனையுமின்றி நேராக அம்பாள்

-4 ஆம் பக்கம் பார்க்க

## பெற்றோல் லீட்டர் ரூ: 13.50; கல்வியங்காட்டில் விற்பனை!

கொழும்பிலிருந்து தனியார் வாகனத்தில் எடுத்து வரப்பட்ட பெற்றோல் கட்டுப்பாட்டு விலையான லீட்டர் பதின்மூன்று ரூபா ஐம்பது சதத்துக்கு விற்பனை செய்யப்பட்ட சம்பவம் நேற்று கல்வியங்காட்டில் நடைபெற்றது.

நகரின் பல பகுதிகளிலும் போத்தல் சுமார் 25 ரூபாவாக விற்பனை செய்யப்படுகையில், இங்கு கட்டுப்பாட்டுக்கு விற்பனை செய்யப்பட்டதால், சட்டநாதர் கோவில் சந்தி

-4-ஆம் பக்கம் பார்க்க

## வாசனுக்கு கவிதாஞ்சலி

குருநகரில் சென்ற மாதம் 21ம் திகதி இடம்பெற்ற துப்பாக்கிச் சூட்டிற்குப் பலியான வாசனுக்கு கவிதை வடிவில்

—4-ஆம் பக்கம் பார்க்க

வட்டாரக் கல்வி அதிகாரி சொல்கிறார்:

# கூட்டுறவுத்துறை வளர்ச்சி அடைவதற்கு இல்லத்தலைவி உதவவேண்டியது அவசியம்

(உடுப்பிட்டி)

"யுத்த காலத்தில் ஆரம்பமான கூட்டுறவுத்துறை இன்று தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் மிகவும் அவசியமான தானதொன்றாக உள்ளது. இல்லத் தலைவிகள் கூட்டுறவுக் கடைகளுக்கும் கூட்டுறவு அம்சங்களுக்கும் ஒத்துழைப்பு வழங்குவதன் மூலம்தான் இந்நாட்டில் கூட்டுறவுத் துறையை வளர்க்க முடியும்.''

இவ்வாறு உடுப்பிட்டி வட்டாரக் கல்வியதிகாரி திரு. வ. க. ஈசுரபாதம் கட்டைவேலி நெல்லியடி ப.நோ.கூ. சங்கத்தினால் நடத்தப்பட்ட தையல் பயிற்சி நெறியில் சித்தியெய்தியவர்களுக்கு சான்றிதழ் வழங்கும் வைபவத்தில் பிரதமவிருந்தினராகக் கலந்து கொண்டு உரையாற்றிய போது தெரிவித்தார்.

சங்கத் தலைவர் திரு பீ. சிதம்பரப்பிள்ளை தலைமையில் வைபவம் நடைபெற்றது. திரு. ஈசுரபாதம் மேலும் பேசும் போது இப்பயிற்சியை உங்கள் சுயவேலைவாய்ப்புக்கென மட்டும் பயன்படுத்தாது பிறருக்கும் கற்றுக் கொடுத்து தையல் கலையைவளர்க்கவேண்டும், எனக் கேட்டுக் கொண்டார்.

தலைவர் திரு. சிதம்பரப்பிள்ளை பேசும்போது நெல்லியடிப் பகுதியில் கள்ளச் சந்தையில் தேநீர், அரிசி, எரிபொருள் என்பன ஓரளவு கட்டுப்பாடான விலையில் விற்கப்படுகின்றனவேயென்றால் இப்பகுதியில் எமது சங்கத்தின் தேநீர்ச்சாலை இருப்பதுடன் அரிசியும் நியாயமான விலையில் நாம் விற்கின்றமையினாலேயேயாகும். சங்கத்தின் பல வித சேவைகளையும் அவர் விளக்கிக் கூறினார்.

வண. பிதா. அல்பிறட் அன்ரனியும் உரையாற்றினார்.

## வரி விளம்பரம்

### விற்பனைக்கு

நல்லூர் முத்திரைச்சந்திக்கு அண்மையில் நவீன வசதிகளுடன் 2½ பரப்பு காணியில் நாலு அறைகள் கொண்ட புதிய வீடும், இரண்டு அறைகள்கொண்ட வீடும்விற்பனைக்கு உண்டு. விளம்பர இல: 5373 C/o ஈழமுரசு இல 37, கண்டி வீதி, யாழ்ப்பாணம்.

### விற்பனைக்கு

நல்ல நிலையிலுள்ள பாவித்த வீட்டுத் தளபாடங்கள், மற்றும் வீட்டுப் பாவனைப் பொருட்கள் அனைத்தும் சனிக்கிழமை (22-6-85) காலை 10 மணிக்கு விற்பனை செய்யப்படும். இடம்: 67, ஸ்ரேஷன் றோட், வீரகேசரி காரியாலயத்தின் அருகாமையில். மேலும் விபரங்களுக்கு: S. ஜெயராஜா 117, டேவிட் வீதி, யாழ்ப்பாணம்.

### ஏல விற்பனை

ஒவ்வொரு சனிக்கிழமைகளிலும், ஞாயிற்றுக்கிழமைகளிலும், புதன்கிழமைகளிலும் காலையிலிருந்து அநேகவித பொருட்கள் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதி ... கல்வியங்காட்டுச் சந்தைக் கட்டடத்தில் விற்பனையாகும்; உங்களிடம் விற்பனைக்கிருக்கும் பொருட்கள் எவையானாலும் அனுப்பி வைக்கலாம். விபரங்களுக்கு: ஏலவிற்பனை நிலையம், கோப்பாய்.

## உண்ணாவிரதம் இருந்தனர்

(சுழிபுரம்)

திருமணவயதை அடையாத இளம் பெண் ஒருவர் தான் விரும்பிய வாலிபருடன் சென்றதால் ஏற்பட்ட சிக்கலைத் தீர்ப்பதில் ஈடுபட்ட இளைஞர் குழு ஒன்று விசாரணையின் வழங்கிய தீர்ப்பு, அமுல் செய்யப்படாததை அடுத்து இப்பகுதி மக்கள் மூன்று தினங்கள் உண்ணாவிரதம் இருந்து தமது எதிர்ப்பைத் தெரிவித்தனர்.




✳ தெல்லிப்பளை - சிறிஸ்கந்தராசா யோகேஸ்வரி தம்பதிகளின் மகன் சதீசன் இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✳ மட்டுவில்தெற்கு ஐயம்பிள்ளை பூமணி தம்பதிகளின் மகள் நாகநந்தினி இன்று தனது ஒன்பதாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✳ ஆவரங்கால் நடராசா பூமணி தம்பதிகளின் மகள் அனுஷா இன்று தனது ஏழாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✳ இரணைப்பாலை யேசுதாசஸ் யோகராணி தம்பதிகளின் மகன் செல்வானந்த ஜஸ்ஷன் இன்று தனது பதினொராவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✳ உருத்திரபுரம் அன்ரன் நவராஜா ஞானம் தம்பதிகளின் மகன் ஆவென் இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✳ யாழ் - புங்கன்குளம் றோட் சண்முகராசா ராணி தம்பதிகளின் மகள் தயாளினி இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✳ கிளிநொச்சி திருவையாறு முருகையா தனலக்குமி தம்பதிகளின் மகள் தர்ஷிகா இன்று தனது முதலாவது பிறந்தநாளைக் கொண்டாடுகிறார்.

✳ நெல்லியடி தம்பிராசா தம்பதிகளின் மகன் ஸ்ரீதர் இன்று தனது பதினொராவது பிறந்தநாளைக்கொண்டாடுகிறார்.

## பரீட்சைக்கு பதிவு செய்ய விசேட ஒழுங்குகள்

ஸ்ரீ ஜெயவர்த்தனபுர பல்கலைக்கழகத்தில் 1985/86 ஆம் ஆண்டு வணிக முதற்தேர்வுப் பரீட்சைக்குப் பதிவு செய்யத் தவறிய மாணவர்கள் தம்மைப் பதிவு செய்து கொள்வதற்கு விசேட ஒழுங்குகள் செய்யப்பட்டுள்ளன.

இப்பரீட்சைக்குப் பதிவு செய்து கொள்ளவேண்டும் என்ற அறிவித்தல் வெளியாகியிருந்தபோது யாழ்ப்பாணத்தில் நிலவிய சூழ்நிலை காரணமாகநாட்டின்வடக்கு,கிழக்குப் பகுதிகளைச் சேர்ந்த பல மாணவர்கள் தம்மைப் பதிவுசெய்து கொள்ளவில்லை

இதனால் யாழ். பட்டப்படிப்புகள் கல்லூரி மாணவர் மன்றம் யாழ். அரசாங்க அதிபர் திரு. எம். பஞ்சலிங்கத்துடனும், கிராமிய கைத்தொழில் அமைச்சர் திரு. எஸ். தொண்டமானுடனும் தொடர்பு கொண்டதற்கமைய அவர்கள் கல்வி அமைச்சின் செயலாளர் கலாநிதி ஸ்ரான்லி கல்பகேயுடன் தொடர்பு கொண்டு எடுத்த நடவடிக்கையைத் தொடர்ந்தே இவ் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

## கொள்ளை மலிவு

(மிருசுவில்)

தென்மராட்சிப் பகுதியில் தற்போது மாம்பழத்தின் விலையில் அதிகளவு வீழ்ச்சி காணப்படுகின்றது. தினம் தோறும் விற்பனைக்காகப் பெருமளவு மாம்பழம் கொடிகாமம், சாவகச்சேரி சந்தைகளுக்குக்கொண்டு வரப்படுகின்றன. போக்குவரத்து சீர்குலைவால் தென் பகுதிக்கு இம் முறை மாம்பழம் அதிகளவில் அனுப்பப்படாமையே இந் நிலைக்குக் காரணமெனக் கூறப்படுகின்றது.

## பாராட்டு விழா

(வண்ணார்பண்ணை)

யாழ். இந்து ஆரம்பப் பாடசாலை அதிபர் திரு. செ. கனகரத்தினம் ஓய்வு பெற்றதையொட்டி பாடசாலை அபிவிருத்திச் சங்கம் அவருக்குப் பாராட்டு விழா ஒன்றினை நடத்தியது

திரு. வி எஸ். இராமநாதன் விழாவுக்குத் தலைமை தாங்கினார்.

பலரும் அதிபரின் சேவையைப் பாராட்டி உரை நிகழ்த்தினர்.

சங்கச் செயலாளர் திரு. செ. கோடீஸ்வரன் நன்றியுரை நிகழ்த்தினார்.

## இலவச வகுப்பு

(அரியாலை)

புங்குடுதிவு மேற்கு சிவன் கோவிலில் பிரம்மஸ்ரீ ஸ்ரீநிவாச நாகேந்திரக் குருக்களாலும், புளியங்கூடல் மகாமாரி அம்மன் கோவிலில் பிரம்மஸ்ரீ கு. குணேஸ்வரக் குருக்களாலும் இலவச சமஸ்கிருத வகுப்புக்கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. பல அந்தணர்கள் இதில் சேர்ந்து கல்வி கற்று வருகின்றார்கள்.

### ஏல விற்பனவு

காரைநகர் மாப்பாணவூரி திரு. தி. க. பெரிய தம்பி அவர்களிடம் 01-06-1983 தொடக்கம் 30-05-1984வரை அடைவு வைத்து மீட்கப்படாத நகைகள் 11-07-1985 வியாழக்கிழமை காலை ஒன்பது மணி தொடக்கம் அதே அடைவு கடையில் வைத்து என்னால் விற்கப்படும்,

கே. இராஜகோபால்
ஏலவிற்பனையாளர்
வண்ணார்பண்ணை


## யாழ்ப்பாண மாநகராட்சி மன்றம்

யூனிசெவ் திட்டத்தின் கீழ் பின்வரும் இடங்களில் ஒவ்வொன்றும் பத்தாயிரம் (10,000) கலன் கொள்ளளவுள்ள குடிநீர் மேல்நிலத் தொட்டி ( Overhead Tank ) அமைக்கும் வேலைக்கான

## கேள்வி அறிவித்தல்

பின்வரும் இடங்களில் மேற்படி அமைப்பு வேலைக்கான கேள்விகள் யாழ்ப்பாண மாநகராட்சி மன்றத்துடனோ அன்றி வேறு அரசாங்கத் திணைக்களங்களுடனோ ரூபா 200,000க்கு குறையாது ஒப்பந்தகாரராகப் பதிவு செய்யப்பட்டவர்களிடமிருந்து யாழ்ப்பாணமாநகராட்சி மன்ற ஆணையாளரால் 05-07-85 ஆம் திகதி வெள்ளிக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை ஏற்றுக்கொள்ளப்படும்.

01. அரியாலை மேற்கு - கலைமகள் வட்டாரம்
02. அரியாலை கிழக்கு
03. நல்லூர் ஜமுனா வீதி
04. பொம்மைவெளி

04-07-85 ஆம் திகதி வியாழக்கிழமை நண்பகல் 12.00 மணிவரை மீளளிக்கப்படக்கூடிய கேள்வி வைப்புப் பணமாக ரூபா 1,000/-ம், மீளளிக்கப்படாத கேள்வி வைப்புப்பணமாக ரூபா. 250/-ம் செலுத்துவதன் பேரில் மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளக்கூடிய படிவங்களின் இணைப் பிரதிகளில் கேள்விகள் சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.

மேலதிக விபரங்களை மாநகராட்சி மன்ற மராமத்துப் பொறியியலாளரிடமிருந்து அறிந்துகொள்ளலாம்.

சி. வீ. கே. சிவஞானம்,
மாநகர ஆணையாளர்,
யாழ்ப்பாணம்.

மாநகராட்சி மன்ற அலுவலகம்,
யாழ்ப்பாணம். 19-06-85.



# பேர்லின் பிரயாணம்

ஜூலை 1-ம் திகதி பயணத்துக்கான
விமான ரிக்கட்டுகள் பதிவு செய்யப்படுகின்றன
25 ஆசனங்கள் மட்டுமே உள்ளன

நிதி ஏற்பாடுகளும் கடன் வசதிகளும்
செய்து கொடுக்கப்படுகின்றன

உங்களுக்குத் தேவையான திகதிகளில்
பயணம் மேற்கொள்ளவும் உடனே நாடுங்கள்!

- மதராஸ், திருச்சி மற்றும் நகரங்களுக்கு விசா, பிரயாண டிக்கட் ஒழுங்குகளுக்கும்
- சிங்கப்பூர், கோலாலம்பூர், அவுஸ்திரேலியா, மற்றும் பல நாடுகளுக்கான பிரயாண ஒழுங்குகளுக்கும்
- பாஸ்போட், விசா, பயணிகள் காசோலை ஒழுங்குகளுக்கும்

## தமிழர் நிதியம்

நிதி நிறுவனம்

140, நாவலர் வீதி
(மனோகரா தியேட்டர் அண்மையில்)

யாழ்ப்பாணம்
தொலைபேசி: 22437

ஈழமுரசு



### உதய சிந்தனை

எது தவறினாலும் தருமம் தவறுவது இல்லை; நன்மை செய்தால் நல்லதே விளையும்; தீமை செய்தால் தீமையே விளையும்.

-- புத்தர்

37. கண்டி வீதி, யாழ்ப்பாணம் தொலைபேசி: 23336

## இதய ஒலி

22-6-1985 சனிக்கிழமை (குரோதன ஆனி 8)

# அழிவினைத் தடுப்பதற்கு ஐந்து மாத அவகாசம்

கடந்த செவ்வாயன்று அறிவிக்கப்பட்ட 'யுத்த நிறுத்தம்' பற்றி முன்னுக்குப் பின் முரணான அறிக்கைகள் வெளிநாட்டு வானொலிகளில் ஒலிபரப்பாகி வருகின்ற போதிலும், உள்நாட்டைப் பொறுத்தளவில் மக்கள் மத்தியில் நம்பிக்கை ரேகைகள் தென்படுவதை அவதானிக்கக் கூடியதாகவிருக்கின்றது.

கூட்டணி நிர்வாகச் செயலர் திரு. ஆலாலசுந்தரம் சுட்டிக் காட்டியதுபோல, இன்றைய சமூக நிலைக்கு வழி சமைத்துக் கொடுத்த பாரத அரசு, தமிழ் பேசும் மக்களின் அபிலாஷைகளை நிறைவேற்றுமென்ற நம்பிக்கையே இதற்குக் காரணமாகும்.

பேச்சுவார்த்தைகள் மூலம் பிரச்சினைக்குத் தீர்வு காண்பதற்காக ''ஆயுதங்களைத் தற்காலிகமாக கீழே வைத்தல்'' என்ற முடிவு, பாரத அரசு ஈழத் தமிழர் பிரச்சினையைத் தீர்க்க இதுவரை எடுத்து வந்த நல்ல முயற்சிகளுக்கு இளைஞர் இயக்கங்கள் வழங்கிய மிகப் பெரிய கௌரவமாகவே கருதப்படுகின்றது.

''தீவிரவாதிகள் பயந்து விட்டனர்; தோல்வி கண்டு விட்டனர்; அதனால்தான் யுத்த நிறுத்தத்திற்கு இணங்கினர்'' என்பன போன்ற அரச தரப்பு அறிக்கைகளை, பெரும்பான்மை மக்களைத் 'தாஜா' பண்ணுவதற்காக விடுக்கப்படுபவை என்ற நோக்குடன் கவனிக்கவேண்டியுள்ளது.

பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு இடைக்கால இணக்கம் காணப்பட்டுள்ள நிலையில் ''மீசையிலே மண்படவில்லை'' என்ற கதைதான் என்றாலும், இளைஞர்களைச் சீண்டிவிட்டு விளையாட்டுப் பார்க்கவும் இவ்வறிக்கைகள் மாறிவிடலாமென்பதைச் சம்பந்தப்பட்டவர்கள் உணரத் தவறுவது கவலையையே தருகின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளின் நேற்று முன்தின வானொலி அறிக்கை தற்காலிக யுத்த நிறுத்தத்திற்கு இணங்கிய அவர்களின் தற்போதைய விரக்தி மனோநிலையைப் புரிய வைப்பதாகவுள்ளது.

நேற்று முன்தினமிரவு பி. பி. ஸி. தெரிவித்த யுத்த நிறுத்த நிபந்தனைகள், இரண்டு தினங்களுக்கு முன்னர் நாம் தெரிவித்த அச்சத்தை மேலும் அதிகரிக்கச் செய்வதாகவுள்ளது.

ஜூன் முதலாம் திகதியிலிருந்து செப்டம்பர் இறுதி வரையான ஐந்து மாத காலத்திற்கு யுத்த நிறுத்த இணக்கம் காணப்பட்டுள்ளதென்பதையும், இது முடிவு பெற இன்னமும் பதினெட்டு வாரங்கள் இருப்பதையும் இச்செய்தி குறிப்பிட்டுக் காட்டியது.

முதல் மூன்று மாதங்களில் அரசியல் திருத்தங்கள் கொண்டுவரப்பட வேண்டுமெனவும், அடுத்த இரு மாதங்களுக்குள் அவைகளை நடைமுறைக்குக் கொண்டுவர பூரண ஒழுங்குகளும் செய்யப்படவேண்டுமெனவும் இந்த நிபந்தனையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாக பி. பி. ஸி. தெரிவித்துள்ளது;

முன்னைய காலங்களைப் போலன்றி, இம்முறை சகல அரசியல் திருத்தங்களும் அமுலுக்கு வருவதற்கு முன்னர், பிரதான எதிர்க் கட்சிகளினதும், சகல பௌதத பீடங்களினதும் அங்கீகாரத்தைப் பெறவேண்டுமென ஐந்து பிரதான தமிழீழ விடுதலை இயக்கங்களும் விடுத்துள்ள நிபந்தனை, இனப் பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வைக் காண்பதில் இவர்கள் கொண்டுள்ள அக்கறையை எடுத்துக் காட்டுகின்றது.

பயங்கரவாதம் நடைமுறையிலிருக்கும்வரை இனப் பிரச்சினைக்குத் தீர்வு காணமுடியாது என்று சாட்டுச் சொல்லிவந்த காலம் போய்விட்டது.

பயங்கரவாதிகள் என்று பட்டம் சூட்டப்பட்டுவந்த தமிழ்ப் போராளிகள் வழங்கியுள்ள ஐந்து மாத இடைக் காலம், பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வு காண நிச்சயமாகப் போதும்.

இரண்டு நாட்களில் பயங்கரவாத தடுப்புச் சட்டத்தையும், ஒரே தினத்தில் அரசியலமைப்பின் ஆறுவது ஷரத்தையும் பாராளுமன்றத்தில் கொண்டுவந்து நிறைவேற்றிய அரசாங்கத்திற்கு, ஐந்து மாத காலம் இலவேளை கூடுதலாகவும் இருக்கலாம்.

இருந்தாலும், தாரள மனது கொண்டு தமிழ் மக்களின் அமைப்புக்கள் வழங்கிய ஐந்து மாத அவகாசத்தை அரசாங்கம் சரியாகப் பயன்படுத்தித் தீர்வு காணுமானால், இந்த நாடு மாபெரும் யுத்தமொன்றிலிருந்தும், அநியாயமான அழிவிலிருந்தும் தன்னைக் காப்பாற்றிக் கொள்ள முடியும்.

★ பயங்கர குண்டுவெடிப்பு: எம்.பி உட்பட எழுவர் கொலை

# நேபாளத்தில் பதற்ற நிலை பலமான பந்தோபஸ்து!

(காத்மண்டு)

நேபாளத்தில் நிகழ்ந்துள்ள பாரிய வெடிகுண்டு வெடிப்புச் சம்பவங்கள் பெரும் விபரீத விளைவுகளை ஏற்படுத்தியுள்ளன என்று நேற்று அறிவிக்கப்பட்டது இச்சம்பவங்களில் ஓர் எம் பி உட்பட எழுவர் கோரமாகக் கொல்லப்பட்டுள்ளனர், இருபது பேர் வரை காயமுற்றுள்ளனர் இக்குண்டுகள் ஓரிடத்தில் மாத்திரமென்றன்றி பரவலாக வெடிக்க வைக்கப்பட்டுள்ளன தேசிய சட்டமன்றக் கட்டடம், ஹோட்டல், பள்ளத்தாக்குப் பகுதி ஆகியனவற்றில் இக்குண்டுகள் வெடித்துள்ளன; மரணங்களும் பரவலாக இடம்பெற்றுள்ளன. தலைநகரில் இக் கொடூரச் சம்பவங்களைத் தொடர்ந்து கடும் பந்தோபஸ்து நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. துருப்புகளின் ரோந்துப் பணிகள் தீவிரப்படுத்தப்பட்டுள்ளன.

பயங்கரவாதிகளுக்கு எதிராக மிகக் கடும் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்று உள்துறை மந்திரி திரு சிரேஸ்ரா எச்சரித்துள்ளார்.

இதற்கிடையில் பாராளுமன்றத்தின் அவசரக் கூட்டத்திற்கு மன்னர் பிரேந்திரா அழைப்பு விடுத்துள்ளார்.

மேற்படிச் சம்பவங்களுக்கு இதுவரை எவரும் பொறுப்பேற்றதாக அறிவிக்கப்படவில்லை எனினும் சந்தேகத்தின் பேரில் சிலர் காவலில் வைக்கப்பட்டுள்ளனர் என்றும் சிலர் தேடப்பட்டு வருவதாகவும் அரசு அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

ஜெனீவாவில் நடைபெறுகிறது

## ஆப்கான். பாக். மந்திரிகள் புதிய சுற்றுப் பேச்சுக்கள்

(ஜெனீவா)

ஆப்கானிஸ்தான் விவகாரம் தொடர்பாகப் பாகிஸ்தான் வெளிநாட்டமைச்சரும், ஆப்கானிஸ்தான் வெளிநாட்டமைச்சரும் ஜெனீவாவில் தமது புதிய சுற்றுப் பேச்சுவார்த்தைகளை ஆரம்பித்துள்ளனர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இப் பேச்சுவார்த்தைகள் ஐந்து நாட்கள் வரை நீடிக்கும் என அறிக்கைகள் தெரிவிக்கின்றன.

வாஷிங்டனிலும் சோவியத் யூனியனும், அமெரிக்காவும் இவ் விவகாரம் குறித்து சந்திப்பு நடத்திவருவதும் ஈண்டு குறிப்பிடத்தக்கது.

## தற்காலிக நிறுத்தம்?

(வாஷிங்டன்)

பாகிஸ்தானுக்கு நவீன ஆயுதங்கள் வழங்குவதை அமெரிக்கா தற்காலிகமாக நிறுத்தியுள்ளதாக வாஷிங்டன் அறிக்கைகள் நேற்றுத் தெரிவித்தன.

விமானக் கடத்தல் விவகாரம் சூடுபிடிக்கிறது

## அமெரிக்கா பகிரங்கமாகக் கேட்குமேயானால் நிபந்தனை ஏற்க தயார் என்கிறது இஸ்ரேல்

(பெய்றூட்)

அமெரிக்க விமானக் கடத்தல் விவகாரத்தில் நெருக்கடி நிலை உச்சக் கட்டத்தை அடைந்து வருகிறது. இஸ்ரேல்தான் சிறைவைத்துள்ள எழுநூறு லெபனான் கைதிகளையும் ஷியாட் அமால் முஸ்லீம் மக்கள் படையினரின் நிபந்தனையை ஏற்று விடுதலை செய்வதற்கு அமெரிக்கா பகிரங்கமாகக் கேட்டால் தயாராக இருப்பதாக இப்போது அறிவித்துள்ளது.

ஆனால் அமெரிக்கா தன் நிலைப்பாட்டில் உறுதித் தளர்வைக் கொண்டிருக்கவில்லை, கடத்தல்காரர்களின் மிரட்டலுக்குத் தாம் அடிபணியப் போவதில்லை என்று அமெரிக்கத் துணை ஜனாதிபதி திரு. ஜோர்ஜ் புஷ் திட்டவட்டமாகக் கூறிவிட்டார்.

இதற்கிடையில் பணயக் கைதிகள் கடத்தல்காரர்கள் மீது இராணுவ நடவடிக்கை எடுக்க வேண்டாம் என்று அமெரிக்க ஜனாதிபதி திரு. ரெருணல்ட் றீகனிடம் மீண்டும் கோரிக்கை விடுத்துள்ளனர்,

கடத்தல்காரர்கள் பணயக் கைதிகளை நிருபர்கள் முன் கூட்டிவந்து காண்பித்தனர். அவர்கள் பாதுகாப்பாக இருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது; விமானம் தொடர்ந்தும் பெய்றூட்டிலேயே தரித்து நிற்கிறது. இதேவேளை சர்வதேசச் செஞ்சிலுவைச் சங்கத் தலைவர் ஜனாதிபதி திரு. றீகனுடன் இது தொடர்பாகச் சந்திப்பு நடத்தியுள்ளார்.

எனினும் பணயக் கைதிகள் செஞ்சிலுவைச் சங்கத்திடம் ஒப்படைக்கப்படும் சாத்தியமில்லை என்று கூறப்படுகிறது.

இவ்விமானம் கடத்தப்பட்டு பத்து நாட்கள் நெருங்கிக் கொண்டிருக்கும் இவ்வேளை இச்சம்பவம் ஜனாதிபதி திரு. றீகனுக்குப் பெரும் நெருக்குதலை ஏற்படுத்தி வருகிறது என அரசியல் அவதானிகள் தெரிவிக்கின்றனர் இந்நெருக்கடியிலிருந்தும் தன் கௌரவத்தைக் காப்பாற்றிக் கொள்வதற்கு அவர் அடுத்து எடுக்கப் போகும் நடவடிக்கை என்ன என்பது குறித்து சர்வதேச சமுதாயம் ஆவலுடன் எதிர் நோக்குகிறது.

## குஜராத் குழப்பம் விஸ்வரூபம்

(குஜராத்)

குஜராத்தில் கலவரம் மீண்டும் விஸ்வரூபம் எடுத்து வருவதனை அறிக்கைகள் எடுத்துச் சொல்கின்றன. நேற்று முன்தினம் பொலிசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்ய நேரிட்டபோது அறுவர் கொல்லப்பட்டதாகத் தெரிவிக்கப்பட்டது;

கலகக்காரரை அடக்கவே பொலிசார் இந் நடவடிக்கை எடுத்தனராம்.

இதற்கிடையில் முதல் மந்திரி திரு. சோளங்கி புதுடில்லி விரைந்துள்ளார்;

திரிப்பொலியில் திகில் சம்பவம்

## கார் குண்டு வெடிப்பு: 30 பேர் மடிவு; பலர் காயம்

(திரிப்பொலி)

லெபனான் வடக்குப் பகுதியான திரிப்பொலியில் ஏற்பட்ட கார் குண்டு வெடிப்பில் முப்பது பேர் மடிந்தனர். ஐம்பது பேர் காயமடைந்தனர். வாடிக்கையாளர்கள் நிறைந்து வழிந்த நான்கு மாடிக் கட்டடம் ஒன்றும் இடிந்து வீழ்ந்தது; அருகில் சென்று கொண்டிருந்த பல வாகனங்கள் இதனால் சேதமடைந்தன.

தமிழக ஜனதா தலைவர் கருத்து

## ராஜீவ்-ஜே.ஆர் பேச்சுக்கள்: முடிவு ஏமாற்றம் தருகிறது

(கோயம்புத்தூர்)

''பாரதப் பிரதம மந்திரி திரு ராஜீவ் காந்தியும் இலங்கை ஜனாதிபதி ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் இலங்கை இனப்பிரச்சினை தொடர்பாக நடத்திய பேச்சுவார்த்தை முடிவுகள் ஏமாற்றம் அளிப்பனவாக இருக்கின்றன'' என்று கோயம்புத்தூரில் நடைபெற்ற ஜனதாக் கட்சியின் இருநாள் மாநாட்டில் தமிழ்நாடு கிளைத் தலைவர் திரு. யு கே பி நடராஜன் பேசுகையில் தெரிவித்தார்.

இம்மாநாட்டில் கலந்து கொண்டு கர்னாடக முதலமைச்சர் திரு. ராமகிருஷ்ண ஹெக்டே பேசுகையில், எதிர்க் கட்சிகளை ஒன்றிணைக்க வேண்டும் என்ற ஜனதாக் கட்சியின் ஐந்து வருடகால முயற்சி வீணாகி விட்டது'' என்றார்.

''மத்திய அரசு விலைவாசி உயர்வைக் கட்டுப்படுத்த முழுமையாக முயற்சிக்கவில்லை'' என்றும் அவர் குற்றஞ் சாட்டினார்.

## ஐவர் கைது

(அமிர்தசரஸ்)

பஞ்சாபில் பயங்கரவாதிகள் எனச் சந்தேகிக்கப்படும் ஐவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என நேற்றுத் தெரிவிக்கப்பட்டது.

## பெருவெள்ளம்

(அஸாம்)

அஸாமில் பெருவெள்ளம் தொடர்ந்து நீடிப்பதால் ஐம்பதாயிரம் மக்கள் முகாம்களில் தஞ்சமடைந்துள்ளனர். பதினெறு பேர் வெள்ளத்தால் மடிந்துள்ளனர்.

ஈழமுரசு

## யாழ்-திருச்சி விமான சேவையை ஆரம்பிக்குமாறு வேண்டுகோள்

(சென்னை)

இலங்கையிலிருந்து இந்தியா வர விரும்பும் பயணிகளுக்குத் தாமதமின்றி விசா வழங்க இந்திய ஹைகமிஷனுக்கு உத்தரவிட வேண்டும் என்று பிரதம மந்திரி திரு ராஜீவ் காந்தியிடம் உலகத் தமிழ் இளைஞர் பேரவைத் தலைவர் டாக்டர் இரா. ஜனார்த்தனன் கேட்டுக் கொண்டுள்ளார். நேற்று சென்னையில் அவர் வெளியிட்டிருக்கும் அறிக்கை ஒன்றில் யாழ்ப்பாணத்துக்கும், திருச்சிக்கும் இடையே விமானப் போக்குவரத்து ஒன்றை நடத்தும்படியும் கோரியுள்ளார்.

பாராளுமன்றத்தில் நேற்று:

# இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கக்கூடிய சாத்தியக்கூறு தெரிகிறது!

## அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா பேச்சு

(கொழும்பு)

"இந்திய—இலங்கைத் தலைவர்கள் நடத்திய பேச்சுவார்த்தைகளையடுத்து நாட்டின் இனப்பிரச்சினையைத் தீர்த்து வைக்கக்கூடிய சிறந்த சாத்தியக் கூறுகள் தென்படுகின்றன. பேச்சுவார்த்தைகளின் மூலம் இப்பிரச்சினையைத் தீர்த்து வைப்பது ஜனாதிபதியின் நோக்கமாகும். இக்காரணத்தால் தான் வன்முறைகளை நிறுத்துவதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன."

இவ்வாறு நேற்றுப் பாராளுமன்றத்தில் பேசிய கடற்றொழில் அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா தெரிவித்தார்.

நேற்றுக் காலை பாராளுமன்றம் கூடியபோது அவசரகாலச் சட்ட விவாதத்திற்கு மேலதிக நேரம் வழங்கப்பட வேண்டும் என்று எதிர்க்கட்சித் தலைவர் அனுரா பண்டாரநாயகா கேட்டுக் கொண்டார்.

தற்போதைய கால கட்டத்தில் அவசர கால நிலைமை குறித்து விரிவாகவும், பூரணமாகவும் விவாதிக்கப்பட வேண்டும் என்று அவர் குறிப்பிட்டார்.

பாராளுமன்ற அலுவல்கள் விளையாட்டுத்துறை அமைச்சர் வின்சன்ட் பெரேரா இதற்குப் பதிலளிக்கையில் விவாதநேரம் நீடிக்கப்பட வேண்டும் என்ற கடிதம் எதிர்க்கட்சித் தலைவரிடம் இருந்து கிடைக்கப் பெற்றதும் அது நிகழ்ச்சிப் பத்திரத்தில் சேர்த்துக் கொள்ளப்படும் என்று சொன்னார்.

கவவான எம்.பி. சரத் முத்தெட்டுவேகம, மகரகம எம்.பி. தினேஷ் குணவர்த்தன, அத்தனகல எம்.பி. லக்ஷ்மன்ஜெயக்கொடி, மதவாச்சி எம்.பி. மைத்திரிபாலசேன நாயக்கா ஆகியோரும் எதிர்க்கட்சித் தலைவரின் கோரிக்கைக்கு ஆதரவு தெரிவித்துப் பேசினர்.

அவசரகாலச் சட்டத்தை நீடிப்பதற்கான பிரேரணையை அமைச்சர் பெஸ்டஸ் பெரேரா சமர்ப்பித்துப் பேசினார்.

### புளியங்கூடல் கோமாரி தேர்

புளியங்கூடல் கோமாரி அம்மன் வருடாந்த ரதோற்சவம் இன்று நடைபெறுகின்றது. அடியார்கள் தமது நேர்த்திக் கடனுக்காக ஆடு, கோழி ஆகியவைகளை ஆலயத்திற்கு வழங்கி வருவதை இம்முறை தவிர்த்துக் கொள்ளுமாறு ஆலய தர்மகர்த்தா அறிவித்துள்ளார். யாழ் சைவபரிபாலன சபை பல வருடமாகவே இது தொடர்பாக வேண்டுகோள் விடுத்துவந்ததும் குறிப்பிடத்தக்கது.

### ஸ்ரீமாவோ....

—1 ஆம் பக்கத் தொடர்

வார்த்தைகளை நடாத்த சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி. ஸ்ரீமாவோ பண்டாரநாயக்கா அடுத்த வாரம் புதுடில்லி செல்வார் எனத் தெரிகிறது. தற்போது சிகிச்சை பெறுவதற்காக யூகோஸ்லாவியாவுக்குச் சென்றுள்ள திருமதி பண்டாரநாயக்கா அங்கிருந்தே புதுடில்லி செல்வார் என எதிர்பார்க்கப்படுகிறது.

### பக்தர்களுக்கு—

... 1ஆம் பக்கத் தொடர்

ஆலய துறையில் இறங்கமுடியுமென்று அரசாங்க அதிபர் அறிவித்துள்ளார். நயினாதீவுக்கு வேறு அலுவல்களுக்காகச் செல்பவர்கள், சோதனை நடைபெறும் துறையில் தற்போதைய நடைமுறைகளுக்கமைய நடத்தப்படுவர்.

### தமிழரை கொலை....

...1ஆம் பக்கத் தொடர்

"பாரதப் பிரதமரும், இலங்கை ஜனாதிபதியும் சந்தித்துப் பேச்சுவார்த்தைகள் நடத்திய பின்னரும் இலங்கையில் இரு பெரும் சம்பவங்கள் இடம் பெற்றுள்ளன.

மீண்டும் இத்தகைய சம்பவங்கள் நிகழாதவாறு எச்சரிக்கையுடன் பார்த்துக் கொள்ளவேண்டும்" என்றும் அவர் இலங்கை அரசிடம் வேண்டுகோள்விடுத்துள்ளார்.

### அனுரா குழுவின....

-1-ஆம் பக்கத் தொடர்

கிழக்கிலங்கைச் சம்பவங்கள் பற்றியும், செருவிலவில் பௌத்த விகாரை தாக்கப்பட்டது பற்றியும் விபரமாகப் பேசிய பின்னர் மகரகம எம்.பி. திரு. தினேஷ் குணவர்த்தனவும் சபையிலிருந்து வெளிநடப்புச் செய்தார்.

கம்யூனிஸ்ட் எம்.பியான சரத் முத்தட்டுவேகம யுத்த நிறுத்தத்தை வரவேற்றுப்பேசியதுடன், இராணுவத்தினர் முகாம்களுக்குள்ளேயே வைத்திருக்கப்பட வேண்டுமெனவும் வலியுறுத்தினர்.

வாக்கெடுப்பின் போது திரு. சரத் முத்தட்டுவேகம மட்டும் எதிர்த்து வாக்களித்தார், மற்றைய எதிர்க்கட்சி எம்பிக்கள் சபையில் இருக்கவில்லை.

### யாழ்தேவி இன்று....

...1ஆம் பக்கத் தொடர்

தும் யாழ்தேவி ரயில் சேவையில் ஈடுபடும்.

யாழ் புகையிரத நிலையத்தில் முன்கூட்டி ஆசனங்களைப் பதிவு செய்யமுடியாது. குறிப்பிட்டதின பிரயாணச் சீட்டுகளை அன்றைய தினமே பெற முடியும்.

### மெயில் ரயில்....

அறிவித்தது.

திங்கட்கிழமை கொழும்பில் இருநது மட்டும் யாழ்ப்பாணத்துக்கு மெயில் ரயில் வரும். செவ்வாய் முதல் இரு வழியாகவும் இச்சேவை நடைபெறும்.

'இன்டர் சிற்றி' ரயில் புதன்கிழமை கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கும் வியாழக்கிழமை யாழ்பபாணத்தில் இருந்து கொழும்புக்கும் நடைபெறும்.

அடுத்து நடைபெறும் 'இன்டர் சிற்றி' சேவைகள் பற்றி பின்னர் அறிவிக்கப்படும்.

### பெற்ரேல் லீட்டர்....

1.ஆம் பக்கத் தொடர்

வரை நேற்று மாலை 'கியூ'வில் நின்று வாகனச் சொந்தக்காரர்கள் கொள்முதல் செய்தனர்.

கல்வியங்காட்டிலுள்ள சிங்காரவடிவு எரிபொருள் விற்பனை நிலையமே இவ்வாறு விற்பனை செய்து அனைவரது மதிப்பையும், பாராட்டையும் பெற்றது.

தனியார் வாகனங்களுக்கு இன்று பத்து லீட்டர் பெற்ரேல் இங்கு வழங்கப்படுமென்று அறிவிக்கப்பட்டுள்ளது.

### தீவிரவாதிகள்....

திருப்பியழைக்கும் அவசியம் அரசாங்கத்துக்கு இல்லை என்றும் அரசின் போராட்டம் தீவிரவாதிகளுக்கு எதிரானதேயன்றி இந்தியாவுக்கு எதிரானதல்ல என்றார்.

இந்திய இலங்கை அரசாங்கங்களின் பேச்சுவார்த்தைகள் பற்றி குறிப்பிட்ட அமைச்சர் இருநாடுகளுக்கும் இடையில் பாரம்பரிய நட்புறவு பாதுகாப்பு பற்றி தாம் எடுத்துக் கூறியதுபற்றியும், பிரதமர் ராஜீவ் காந்தி ஈழம் அமைக்க இடமளிக்கப்படாது எனப் பகிரங்கமாகவே கூறினார் என்றும் சொன்னார்.

### திங்கள் முதல் தலைமன்னார் ரயில்

தலைமன்னார் – கொழும்பு ரயில் சேவை அடுத்த திங்கள் முதல் நடைபெறுமென புகையிரதப் பகுதி அறிவித்துள்ளது

### வாசனுக்கு..,

1-ஆம் பக்கத் தொடர்

அஞ்சலி செலுத்தும் பிரசுரமொன்றைத் தமிழீழ இளைஞர்கள் அச்சடித்து நேற்று விநியோகித்தார்கள்.

### கூட்டணியினர்,..

...1ஆம் பக்கத் தொடர்

ரங்கள் தெரிவித்தன.

அண்மையில் தமிழகம் சென்று திரும்பிய திரு சூசைதாசன், கூட்டணிச் செயலதிபர் திரு. அமிர்தலிங்கம் விடுத்த பணிப்புக்கிணங்க இப்பேச்சுவார்த்தைகளை ஒழுங்கு செய்துள்ளார். முதலாவது சந்திப்பு திங்கட்கிழமை ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியுடன் இடம்பெறும்.

### முகாம் பகுதி....

1-ஆம் பக்கத் தொடர்

இது தொடர்பாக அரசாங்க அதிபர் நேற்று ராணுவ, கடற்படைத் தளபதிகளுடன் தொடர்பு கொண்டு பேசினார்.


## மரண அறிவித்தல்

### செல்வி. அன்னரத்தினம் உவில்லியம்

அச்சுவேலியைச் சேர்ந்த, காலஞ் சென்ற திரு. திருமதி உவில்லியம் அவர்களின் அன்பு மகள் செல்வி அன்னரத்தினம் (ஆசிரியை புனித திரேசா மகளிர் கல்லூரி அச்சுவேலி) காலமானார். இவர் பூரணம் செல்லராசா, திருமதி ஞானு சபாபதிப்பிள்ளை (கனடா), இராணி, சாந்தி ஆகியோரின் அன்புச் சகோதரியும், திரு. சபாபதிப்பிள்ளை (கனடா)யின் அன்பு மைத்துனியும் ஆவார். இவரின் நல்லடக்க ஆராதனை ஞாயிறு 23.6.85 அன்று அன்னாரின் இல்லத்தில் நடைபெறும்.

தகவல் : அ. சின்னத்தம்பி



## மரண அறிவித்தல்

### ஐ. திருநாவுக்கரசு

பொலிஸ் உத்தியோகத்தர் திஸ்ஸமஹாராம

ஐ. திருநாவுக்கரசு அகால மரணமானார். அன்னாரின் ஈமக்கிரியைகள் ஞாயிற்றுக்கிழமை காலை 10 மணியளவில் நெடுங்குளம் வீதி, அரியாலை, யாழ்ப்பாணம் என்ற விலாசத்தில் நடைபெறும்.

தகவல்: ஐயம்பிள்ளை (ஆசிரியர், நெடுந்தீவு)
மனைவி, தி. புஷ்பவதி



ஓம் சக்தி
சாவகச்சேரி

## ஸ்ரீதுர்க்கை அம்மன் தேவஸ்தானம் அலங்கார உற்சவம்

அன்புடையீர்,

26-6-85 புதன்கிழமை முதல் 5-7-85 வெள்ளிக்கிழமை வரை 10 நாட்கள் தினசரி துர்க்கை அம்பாளுக்குப் பிற்பகல் 3-00 மணிமுதல் விசேட அபிஷேகமும், பூஜையும், அம்பாள் திருவீதியுலாக் காட்சியும் நடைபெறும். அனைவரும் வந்து துர்க்கை அம்பாளின் திருவருளைப் பெறுக.

குறிப்பு: தற்போதைய நாட்டு நிலைமைகளை முன்னிட்டு சுருக்கமான முறையில் நேரத்துடன் உற்சவம் நடைபெறும்.

11-7-85 இலட்சார்ச்சனை ஆரம்பித்து ஆடிப்பூரத்தன்று 21-7-85 ஞாயிறு பூர்த்தியடையும்.

இங்ஙனம்
தர்மகர்த்தா



## அறிவித்தல்

### நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை

மேற்படி அன்னதான சபையினர் இவ்வாண்டும் தங்கள் சேவையை வழமைபோல் சிறப்பாக 24.6 1985 தொடக்கம் 3.07.1985 வரை நடாத்துவதென தீர்மானித்துள்ளனர்.

நாட்டின் இன்றைய சூழ்நிலை காரணமாக சபையின் தொண்டர்கள் பணம், பொருள் வசூலிக்க, சென்ற ஆண்டுகள் போல் செயற்பட முடியாமல் உள்ளது. எனவே சபைக்கு வழமைபோல் வாரி வழங்கிய பெருமக்கள் இம்முறையும் "அமுதசுரபி" அன்னதான சபையினருடன் தொடர்புகொண்டு தங்களால் இயன்ற பங்களிப்பினைச் செய்யுமாறு மிகப் பணிவன்புடன் வேண்டுகின்றேன்.

சபையின் சென்ற ஆண்டு வரவு செலவு அறிக்கை தவிர்க்க முடியாத சூழ்நிலைகளால் வழமைபோல் உற்சவ காலத்திற்கு முன்னமே வெளியிட முடியாமைக்கு வருந்துகின்றோம். மிக விரைவில் இவ்வறிக்கை சபையினரால் வெளியிடப்படும் என்பதனை பணிவுடன் அறியத்தருகின்றேன்.

தங்கள் உண்மையுள்ள,
க. வே. பரமலிங்கம் (செயலாளர்)
நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதானசபை

முக்கிய குறிப்பு:
பணம், பொருள் அனுப்புபவர்கள் நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அமுதசுரபி அன்னதான சபை, "அமுதசுரபி" மண்டபம், நயினாதீவு 2. என்ற விலாசத்திற்கு அனுப்பும்படியும் அல்லது சபை மண்டபத்தில் கொடுத்து பற்றுச்சீட்டு பெற்றுக்கொள்ளும்படியும் மிகவும் பணிவன்புடன் வேண்டப்படுகின்றார்கள். நன்றி.


'ஈழமுரசு' சாயிபாபா அடவர்டைசிங் அசோசியேற்றஸ் ஸ்தாபனத்தாரால் 37, கண்டி வீதி, யாழ்ப்பாணத்திலுள்ள அவர்களது அச்சகப்பகுதியில் 22-6-85 சனிக்கிழமை அச்சிட்டு வெளியிடப்பட்டது. தொலைபேசி; 23336.

# விடியலைத் தேடும் வெண்புறா

★

**செம்பியன் செல்வன்**

★

"என்னப்பா அது ? — "

"சாமத்திய வீட்டுக்கு நானும் போகேல்ல. நீயும் போக வேணும் ... பேசாம தம்பியை அனுப்புவம் ... மேசையில ஒரு கவரில் ஒரு ஐம்பது ரூபா வைச்சிருக்கிறன் ... அவன் கொண்டுபோய்க் கொடுத்திட்டு வரட்டும் என்ன! அப்ப ஒரு கதையும் எழாது ... "

"நீங்களப்பா என்ன கதை கதைக்கிறியள். ஒரு வயது வந்த பொடியனைச் சாமத்தியச் சடங்குக்குத் தனிய அனுப்பிறதே......"

"அதைப்பாத்தா...... இப்ப இன்னுமொரு நூறோ அம்பதோ தேவைப்படும். மாரிமுத்துவுக்கு கொடுக்கிற காசு எங்களுக்குத் திரும்பி வரவே போகுது...... எனக்கும் வெளியில கொஞ்சம் வேலையிருக்கு... மகனை அனுப்பு...... அவன் போறதும் வாறதுமாக போய் வந்திடுவான்......"

"எல்லாம் சரியப்பா...... அவன் போறனெண்டு சொன்னவனோ... அவன் போக மறுத்தால்... —

—அவருக்குப் பற்றிக் கொண்டு வந்தது.

"நீ என்ன செய்வியோ...... சொல்லுவியோ...... எப்படியாவது அவனை அனுப்பி வை...... வீட்டுக்கு எப்பனென்டாலும் உதவியில்லை.... ஊர் சுத்துறதும்...... வேளா வேளைக்கு வந்து கொட்டிக் கொள்ளுறதும் தான் துரைக்கு வேலை...... நீ உன்ர விசர்க் கதையை விட்டிட்டு அவனைப் போய்வரச்சொல்......!" அவர் குடையையும் எடுத்துக் கொண்டு வேகமாக வெளியேறினார்.

தல்ஸ்தோயின் அறைக்குள் அவரது எழுதும் மேசை, இலக்கியத் தவம் புரிந்த பீடம், எழுதும் மட்டையும், பேனையும், கடதாசிகளும், 'எழுதிக்கொண்டிருந்துவிட்டு இப்போதான் எழுந்தெழுந்துபோனார்' என்ற பாவனையில் கொலுகொண்டுள்ளன. 'ருஷ்ய இனத்தின் வாழ்வு' என்கிற புத்தகம், மெழுகுவர்த்தி, மைக்கூடு, பேப்பர் வெயிட் ...

சாப்பாட்டுக் கூடத்தில் நீளமான மேசையும். அந்தக் கால கதிரைகளும் அவரது நண்பர் உறவினர் மட்டுமன்றி, தல்ஸ்தோயின் சமகாலத்தவரான, துர்கனேவ், சேகவ் போன்ற இலக்கிய மேதைகளும் இம்மேசையில் விருந்துண்டிருக்கிறார்கள். எழுத்தாளர்களோடு, ஓவியர்கள் இசைவாணர்களும் தல்ஸ்தோயின் விருந்தினராக அமைந்த இடமும் அதுதான்.

''தல்ஸ்தோய் சைவ உணவுக்காரராக இருந்தார் .....'' என்று வழிகாட்டிப் பெண்மணி சொன்னபோது, செர்கே என்னைப் பார்த்து முறுவலித்தார்.

வரவேற்பறையில் தல்ஸ்தோய் குடும்பத்தவர் படங்களிருந்தன. எங்கும்- ஒவ்வோரிடத்திலும்- அழகும் அமைதியும் கலையும் பெருமிதமும் இழையிட்டிருந்தன.

அஞ்சலி செலுத்துவதுபோல் நெடிதுயர்ந்த ஓக் மரங்கள் வரிசையிட்டிருந்த பாதையின் தொங்கலில் தல்ஸ்தோயின் சமாதி இருந்தது. சிலுவையோ, சின்னங்களோ வேறெந்தக் கல்வெட்டோ, குறிப்புகளோ இன்றி, காற்றும் புற்களும் அமைதியும் எளிமையும் மட்டுமே இனங்காட்ட அச்சமாதி இருந்தது.

'என்னை லெனினிடம் இட்டுச் சென்றவர் தல்ஸ்தோய்' என்ற அமெரிக்க எழுத்தாளரான மைக்தாவிதோரவின் வாக்கியங்கள் நினைவு வந்தன.

செர்கே ஒரு விஷயத்தைச் சொன்னார்: ஹிட்லரின் படைகள் மாஸ்கோவை நோக்கி வருகையில் யாஸ்னயா போல்யானாவைக் கடக்க நேரிட்டதாம். இந்த இடத்தையே முடிந்தளவு அலங்கோலம் பண்ணியிருக்கிறார்கள். அடக்க ஸ்தலத்தை அவமானம் பண்ணி அவர் சம்பந்தப்பட்ட பொருட்கள் பலவையும் நாசஞ்செய்தார்கள்.

இதேபோல நாஸிப்படைகள் கிளின் நகரில் இசைமேதை சய்க்கோவ்ஸ்கி வாழ்ந்த வீட்டை நாசம் பண்ணிய போது, அங்கேயிருந்த ஜெர்மனிய இசைமேதை பீத்தோவனின் உருவப்படத்தையும் விட்டு வைக்கவில்லை. கிழித்தெறிந்தார்கள்.

சேகவ் வாழ்ந்த வீடொன்றும், துர்க்கேனிவ்வுடைய வீடுங்கூட, இந்த அக்கிரமக்காரர் கையில் சின்னாபின்னப்பட்டிருக்கின்றன.

சேகவ் மியூசியங்களிலொன்று மாஸ்கோவிலிருக்கிறது. ஸ்தாவோ குத்திரின்ஸ்கயா வீதியிலுள்ள ஒடுங்கிய மாடி வீடு. அங்கேதான் அந் தோன்பாவ்லோவிச் சேகவ் முழுமையாக எழுத்தாளனெனப் பரிணமங் கொண்டார். அந்த மேதையின் பல படைப்புக்கள் உருப்பெற்றதும் இந்த வீட்டில்தான். தமது வெளிநாட்டு சுற்றுப் பயணங்கள்- அப் போது இலங்கைக்கும் அவர் வந்திருந்தார்- முடிவடைந்த பின், மாஸ்கோவிலிருந்து 75 கி. மீ. தொலையிலுள்ள இன்னேரிடத்தில் அவர் குடியேறினர்.

புரட்சியின் கவிஞரென்றும், சோஷலிஸ கலாசாரத்தை ஆரம்பித்த வரென்றும் அழைக்கப்படுகிற விளதிமர் மாயகோவ்ஸ்கி, பத்தாண்டு காலம் வாழ்ந்த வீடொன்று செரோவ் வீதியிலுள்ளது. அது இன்று காட்சிச்சாலை ஆக்கப்பட்டுள்ளது. கவிஞரின் வாழ்வைப்பற்றிச் சொல் லும்- வாழ்வுடன் சம்பந்தப்பட்ட- பொருட்கள் இங்கே உள்ளன.

மாஸ்கோவில் இன்னும் கோர்க்கி மியூசியம், தல்ஸ்தோய் மியூசியம், தல்ஸ்தோய் வசித்த இல்லம், புஷ்கின் மியூசியம், தஸ்தயேவ்ஸ்கி மியூசியம், ஒஸ்திரேவ்ஸ்கி மியூசியம்- எல்லாம் இருக்கின்றன.

இந்த மியூசியங்களிலொன்றைப் பார்க்கப்போன ஒரு நாளில், மாலை திரைப்படம் பார்க்கும் புரோகிராமாக இருந்தது. சமகாலத்தில் மக்க ளிடை பெரும் செல்வாக்குப் பெற்றவரான வஸிலி ஷீக்ஷினின் 'பேச்கிலாவச்கி' என்ற படம். தாம் முதலில் எழுத்தாளன் என்று கூறிக்கொண்ட ஷீக்ஷின் பல்லாற்றல் வாய்ந்த கலைஞர். இந்தப் படத்தை நெறியாள்கை செய்து நடித்துமிருந்தார். அவர் மனைவி லிதி யாவும் நடிக்கிறார். மிக இயல்பாக எடுக்கப்பட்டிருந்தது. பத்தாண்டு கட்கு முன் தம் நாற்பத்தைந்தாவது வயதில் மாரடைப்பால் கால மான ஷீக்ஷின், கிராம மக்களைப் பற்றிய கதைகள், நாடகங்கள், திரைப் படச்சுவடிகளை எழுதியவர். இவற்றையொட்டித் தயாரிக்கப்பட்ட படங்களில் பிரதான வேடங்களில் நடித்தவர். அவரது எல்லா எழுத்துக் களும் நூலுருப்பெற்றுள்ளன. இலக்கிய உலகில் அவர் பெயர் அடிக் கடி பேசப்படுகிறது. 'வாழ விருப்பம்' என்ற கதைத் தொகுதி மூலம் தமிழ் வாசகர்கள் அவருடன் அறிமுகங் கொண்டிருப்பார்கள்.

'ஏனப்பா... ஆடம்பரமா ஏதும் செய்யசமல்... வீட்டுக்குள்ளயே குப்பைத் தண்ணி வார்த்தால் என்ன?...' — ஆற்றுமையில் கேட்டான்.

' நல்லகதை. செலவைப் பாத்து நிப்பாட்டிற சங்கதியே' ... நாளைக்கு நாலு பேர் முன்னால முழிக்கிறேல்லியே?... அதேசட ரதி பெரிசாகவில்லை என்று நாக்கு வளிச்சதுகளுக்குப் பதில் சொல்லாமலே?...

'போதுமப்பா... எனக்கு ஆசையில்லாமலே... எங்கட மூத்த பொம்பிளைப்பிள்ளை... வீட்டில நடக்கும் முதல் விசேசம்...

'ஓமப்பா... எங்கட அக்காவுக்கு வடிவாச் சோடிச்சு மணவறையில இருத்திக் கொண்டாட வேண்டும்...' — என்று தேவியும் பூரணியும் சந்தோஷத்தில் கூச்சலிட்டனர்.

'சரி சரி... எல்லாரும் போய்ப்படுங்க... எல்லாம் காலையில பாத்துக் கொள்ளலாம்...'

'என் அப்பனே முருகா!' — என்று ஒருக்கால் வாய் விட்டுக் கூறிய மாரிமுத்து மல்லாந்து படுத்தான்.

ஏதேதோ யோசனைகள் மனதில் புரண்டு நெளிந்தன.

விடிகாலையில் — தெருவில் ஏதோ லொறி வந்து நிற்பது போலவும் தன்னை யாரோ கூப்பிடுவது போலவும் கனவில் நிகழ்வது எனக் கேட்க, முழிப்பு வந்தது.

யாரது?

"மாரிமுத்து...!"

ஓ! வல்லிபுரத்தார்; அவரெங்கே? இந்தக் காலை வேளையில்... லொறியோடு...

அவன் தெருவுக்கு வந்தான்;

வல்லிபுரத்தாரோடு அவர் மகன் வந்திருப்பது தெரிந்தது;




மாஸ்கோவில் மட்டும் புஷ்கின், கோர்க்கி, ஷெவ்செங்கோ, தஸ்தயேவ்ஸ்கி, மயகோவ்ஸ்கி, துர்கனேவ் போன்றோர் பெயர்களால் வீதிகளும், சதுக்கங்களும், மெத்ரோ நிலையங்களும், பூங்காக்களும் அழைக்கப்படுகின்றன.

புஷ்கின் சதுக்கம், மயகோவ்ஸ்கி சதுக்கம் இரண்டையும் இணைப்பது கோர்க்கி வீதி. சதுக்கங்களில் கவிஞர்களின் சிலைகள் நிற்கின்றன. பெலோருஸ்கி ரயில் நிலைய முன்பாக கோர்க்கியின் சிலை இருக்கிறது.

இவை தவிர நாடெங்கிலும் பல்வேறு நிலையங்கள் இலக்கியவாதிகள் பெயரால் நாமகரணஞ் செய்யப்பட்டுள்ளன. கோர்க்கி பெயரால் நகரொன்றும், மயகோவ்ஸ்கி பெயரால் ஊரொன்றுமுள்ளன.

மாஸ்கோவிலிருந்து தெற்கே கிட்டத்தட்ட 200 கி. மீ தொலைவில் தூலா நகருக்கண்மையில் தல்ஸ்தோயின் யாஸ்னயா போல்யானா பண்ணை இருக்கிறது. அப்பிள், பிர்ச், ஓக், மரங்களடர்ந்த தோப்பில், அழகிய பூஞ்செடிகள் அணிவகுத்திருந்த பாதைகள் அவருடைய வெண்ணிற வீட்டை நோக்கிச் சென்றன. பறவைக் குரல்கள் மட்டும் இருந்திருந்து விட்டு ஒலிக்கும் அமைதி. இந்த இடத்தை தல்ஸ்தோய் நேசித்ததில் ஆச்சரியமில்லை. இது அவரை ஆக்கியதா, அல்லது அவர் இதனை ஆக்கினாரா என்ற எண்ணம் வந்தது. தல்ஸ்தோயின் வாழ்விற் பிரிக்க முடியாத அங்கமாக, அவர் தம் வாழ்விற் பெரும் பகுதியைக் கழித்த இடமாக இவ்வனம் விளங்கியிருக்கிறது.

★ சாந்தன்

"ரமேஷ்!''

''என்னம்மா?''

''அப்பா! உன்னட்ட ஒரு வேலை சொல்லி விட்டுப்போயிருக்கிறார்''

''அப்பாவுக்கு வேறவேலையில்லை. என்னவாம்?'' – அவன் செல்லச் சிணுங்கலுடன் கேட்க, தாய் உருகிப் போனாள்.

"பாரன் எலும்பும் தோலுமாய்...... ஒண்டும் சாப்பிட வழியில்லா ததுகளெல்லாம் எப்படியிருக்குதுகள்...''

''அது சரி அப்பா என்னவாம்?''

''மாரிமுத்துவின்ர மகள் ரதி பெரிசாயிட்டாளாம். இண்டைக்குத் தண்ணிவாக்கினமாம். அப்பாவிற்குப் போக வசதிப்படாதாம். அது தான் உன்னை ஒருக்காப்போய் வரட்டாம்...''
அவன் ஆச்சரியமானான்.

''ரதி'' இது வரை பெரிசாகவில்லையா?... அதுக்குள்ள என்ன அழகு...... அப்ப இனி......"

மனம் குதூகலத்தில் விசிலடித்தது.

நள்ளிரவில் அவனை உசுப்பி எழுப்பி பாக்கியம் அந்தச் சேதியைச் சொன்னபோது மாரிமுத்துவுக்குத் தூக்கக் கலக்கத்தில் ஒன்றும் புரிய வில்லை.

'என்னப்பா... என்ன விசயம்?...'

'ரதியெல்லே பெரியவளாயிட்டாள்!'

'என்ன!' — அவன் எழுந்து உட்கார்ந்தான்.

'மெய்யேயப்பா... அம்மாளாச்சியும் கடைசியில கண்விழிச்சுப் போட்டா... எவ்வளவு நாளா ஏங்க வைச்சா... தாயே என்ர புள்ளய நீதான் காப்பாத்தி நல்ல நிலைக்குக் கொண்டுவர வேண்டும்...' — அவன் பிரார்த்தனையினூடே, வேப்பம் பூந்தூறலில் நனைந்தவனாக மேனி சிலிர்த்தான்.

'எப்பவளை கண்டனீர்?...'

'கொஞ்ச நேரத்துக்கு முந்திதான்... வயித்துக்குத்து என்று புளிலே துடிச்சுப் போனாள். பாவம்... அது என்னத்தைக் கண்டது...? பயந்து போய் விட்டது...

'பிள்ளையை இப்பு என்ன செய்திருக்கிறீர்'... குடிக்கக் கிடிக்க ஏதும் கொடுத்தனீரா'... நேரத்தைக் குறிச்சு வைச்சிருக்கிறீரோ'... உந்த நேர காலங்களில தான் பிள்ளையின்ர பிற்கால விசேஷங்கள் தங்கியிருக்கு...'

'ஓமப்பா... நாளைக்கு பிள்ளையின்ர சாதகத்தையும் பெரிசான நாள் நட்சத்திரத்தையும் கொண்டுபோய் சுந்தரம் சாத்திரியாரிட்ட காட்ட வேணும்... முதலில நீர் எழும்பும் பாயைச் சுத்தும்... புள்ளய உந்த இடத்தில தான் தண்ணியூத்துறதுவரை விடவேணும்... வேற மறைவான இடம் எங்க இருக்கு'...

அவர்களின் ஆரவாரம் வீட்டை நித்திரையில் இருந்து எழுப்பி விட்டது. வீட்டு விளக்குகள் தூண்டி விடப்பட்டு இருளை விரட்டிக் கொண்டிருந்தன. தேவி, பூமணி இருவரும் தமக்கையை வியப்புடன் பார்த்துக் கொண்டிருக்க, ரதிக்கு வெட்கம் வெட்கமாக... சிரிப்பு வந்தது.

ரதி புதிய இருண்ட தனிமைக்குத் தள்ளப்பட்டாள். புனிதம்... பாதுகாப்பு.. பண்பாடு எல்லாமே பெண்களைச் சிறை வைக்கின்றனவா? அநாதியா? ஆரம்பமா?

மாரிமுத்துவுக்குப் புதிய புதிய கட்டளைகள் பிறப்பிக்கப்பட்டுக் கொண்டிருந்தன.

'இஞ்சருமப்பா!... காலையில நீர் சாண்டா தெருவுக்குப் போய் சுத்தமான நல்லெண்ணெயா ஒரு போத்தல் வேண்டி வாரும்... ஊர்க் கோழி முட்டை தான் நல்லது... இப்ப ஆற்ற வீட்டில ஊர்க் கோழியள் நிக்குது... எல்லாரிட்டும் வைட்லக்கோணும், புறெயிலரும் தான் வளக்குதுகள்... உவன் நாகேசு இஞ்சாறு ஊர்க் கோழியள் வைச்சிருக்கிறன்... ஊரிப்பட்ட விலை சொல்லுவான்... என்னண்டாலும் வேண்டித்தானே ஆகவேணும்... அதோட இனியிடுற முட்டையளைக் கொஞ்ச நாளைக் கெண்டாலும் ஆருக்கும் கொடுக்காமல் எங்களுக்குத் தரச் சொல்லி வைக்க வேணும்...' — பாக்கியம் மூச்சு விடாமல் சொல்லிக் கொண்டு போனாள். மாரிமுத்து பெரிய யோசனையிலாழ்ந்து போனான்.

'என்னப்பா... நான் சொல்லுறன்... நீர் பேசாமலிருக்கிறீர்'?

'எல்லாம் சரிதானப்பா... இப்ப செலவுக்கு கடனை கிடனை உடன பிரட்ட வேண்டுமே... ஆரிட்டப் போறது எண்டுதான் யோசிக்கிறன்...'

'உதுக்கே உப்பிடி யோசிச்சிரெண்டா... சாமத்தியச் சடங்கை எப்படிக் கொண்டாடப் போறியளோ?...' பாக்கியம் அதிர்ந்தாள்.

# 9

எங்கிருந்தென்று தெரியாமல், என்னவென்றும் புரியாமல் கேட்ட ஒரு வெடியோசை எனக்கு ஊரை ஞாபகப்படுத்தியது. அடிக்கடி வருகிற வீட்டு நினைவுதான் எனினும் இம்முறை வந்தது என் உற்சாகத்தைக் குறைப்பதாக இருந்தது.

இப்போது கேட்டது ஏதாவது பட்டாசாயிருக்கலாம். அல்லது எங்காவது ரயர் போல ஒன்று வெடித்திருக்கலாம். என்றாலும் இந்த மண்ணில் கேட்டிராத வெடிகளா? ருஷ்ய மக்கள் எவ்வளவு கொடூரமான பாதைகளைத்தாண்டி வந்திருக்கிறார்களென்பதை நினைத்துப் பார்த்தேன். புரட்சிவரைக்கும் உள்நாட்டு அடக்கு முறைகள், அதற்கு முன்பும் பிறகும் வெளிநாட்டு ஆக்கிரமிப்பு முயற்சிகள்; எவ்வளவு இழப்புகளைப் போர் அவர்களுக்குத் தந்திருக்கிறது...... இந்த மக்கள் அமைதியை சமாதானத்தை நாடுவதில் வியப்பென்ன? சோவியத் மக்களெல்லோருமே கடவுள் விசுவாசிகளில்லாதிருக்கலாம் என்றாலும் அவர்களெல்லோரும் உழைப்பை விசுவாசிக்கிறார்கள். சமாதானத்திடம் பக்தி செலுத்துகிறார்கள்- என்பதை உணர முடிகிறது ஆங்காங்கு காண்கிற 'மரு மிர்' 'மிஸ மிர்' போன்ற சுலோகங்கள் பலவும் என் நினைவுக்கு வந்தன; இந்த 'மிர்' என்பதற்கு ருஷ்ய மொழியில் மூன்று முக்கிய அர்த்தங்கள்: உலகம், பிரபஞ்சம், சமாதானம்.

லெனின் குன்றுகள் பகுதியில் நடந்து கொண்டிருந்தோம். இங்கிருந்து மாஸ்கோ அழகாயிருந்தது. முன்பு நகரின் ஒரு ஒதுக்குப் புறமாக இருந்த இந்த இடம் இப்போ மாஸ்கோ அரசுப் பல்கலைக்கழக வளாகத்தைத் தன்னில் கொண்டுள்ளது. அதைப்பற்றிய தகவல்களை செர்கே சொன்னார். 16 பீடங்கள், நாலு ஆராய்ச்சி நிறுவனங்கள் தாவரவியல் பூங்கா, வான ஆராய்ச்சிக் கூடங்கள் நான்கு, அரும்பொருட் காட்சிச்சாலைகள், விஞ்ஞான நூலகம், 350க்கு மேற்பட்ட ஆய்வு கூடங்கள் இவ்வளவையும் தன்னுள்ளே கொண்டுள்ளது. அண்மையில் தன் 225 ஆவது ஆண்டு நிறைவைக் கொண்டாடிற்று. பேரறிஞர் லொமனசோவ் முயற்சியால் நிறுவப்பட்டது.

லொமனசோவ், பிற்பட்ட குடும்பமொன்றிற் பிறந்து, தம்முயற்சியால் முன்னுக்கு வந்தவர். இயற்கை விஞ்ஞானத்தின் பல்வேறு துறைகளிலும் பல கலைகளிலும் புலமைபெற்றிருந்தவர், கவிஞர், ஓவியர், இலக்கண ஆசான், சரித்திரவியலாளர், ருஷ்ய நாடு அறிவிற் சிறந்தோங்க வேண்டும் என்றும், அதற்காகப் பல்கலைக்கழகமொன்று அமைய வேண்டுமென்றும், அவரெடுத்த முயற்சிகளால் உருவான இந்த 'எம்கெயு' இன்று அவர் பெயராலேயே அழைக்கப்படுகிறது.